உ

குகமயம்.

திருத்தணிகை

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள்

கீர்த்தனம்.

இது,

ஞாமச்சூர். தமிழ்ப்பண்டிதரும்,

ஆரணி காந்தி தருமபாடசாலைப் போதகாசிரியருமான

ஸ்ரீமத். மு. சுந்தர முதலியாரவர்கள்

மாணவரும்,

சம்புவராயநல்லூர். மணியம். சி. இராமசாமி முதலியார்

புதல்வருமாகிய,

S. R. இராஜேஸ்வரனுர்

அவர்களால இயற்றப்பெற்று,

களத்தூர்.

சண்முக முதலியார் அவர்களால்

...தண்டராம பாண்டிய நாடார்

அவர்களது

...கடன் பிரஸில்

1924.

REGISTRAR OF BOOKS
- JAN 1925
MADRAS

Q26:38·212JR
N12q
181939

காப்பக நிலைய
L81939
சென்னை-600 008

உ

குகமயம்.

சாத்துகவிகள்.

ஆரணி ஜாகீர். தமிழ்ப்பண்டிதர்

மு. சுந்தர முதலியாரவர்கள் சொல்லியது.

கட்டளைக்கலித்துறை.

181939

கார்த்திகைபுத்திரன்கந்தன்முருகக்கடவுளின்மேற்
கீர்த்தனம்பண்ணொடுசெய்தணிங்தெங்கெங்குங்கீர்த்தியுற்றான்
பூர்த்திவளர்சம்புமாநகர்ச்சம்புவின்பொன்னடிசொல்
வார்த்தைநிரம்புராஜேஸ்வரனாகியவல்லவனே.

இவை,

இந்நூலாசியருக்குத் தேசிகராகிய காமக்கூர். தமிழ்ப்பண்டிதர்.

ஸ்ரீமத். மு. சுந்தர முதலியாரவர்கள் குமாரரும்,

திருவெவ்வுளூர். க. க. செ. கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும்

ஆன்மநேயருமாகிய

மு. சு. மாணிக்கவாசக முதலியாரவர்கள் சொல்லிய

கட்டளைக்கலித்துறை.

சம்புநகரினிற்சைவவேளான்குலந்தன்னில்வந்து
வம்புவிழியுமைபங்கனைச்சர்ப்பமணிந்தவனை
வம்புமலராற்றுதிராபசாமிவேண்மாண்படையத்
தெம்புமிகுதியொடீன்றநற்சேயிராசேகரனே.

கருத்தணியாவெயிலாணிளைக்காதுகதிர்வடிவேற்
குருத்தணியாமலசூரரைக்கொன்றகுகமுருகா
விருத்தணியாரடிநீழலிலென்றியாமேத்திவருந்
திருத்தணியாம்பதிச்சுப்ரமண்யன்புகழ்செப்பினனே.

காமக்கூர். தமிழ்ப்புலவர் ஸ்ரீமத். மு. சுந்தர முதலியாரவர்கள்

மாணவரும்,

களம்பூர். போர்டு பாடசாலை தலைமை உபாத்தியாயருமாகிய

ஸ்ரீமான். பழநிவேற் பிள்ளை அவர்கள் இயற்றிய

நேரிசை வெண்பா.

விண்ணாட ரேத்து வியன்றணிகை வேலவன்மேற்
பண்ணாருங் கீர்த்தனங்கள் பாடினனால்—எண்ணாரு
நல்லவயற் சம்புபுரி நன்னகரான் றென்மொழியில்
வல்லகுண ராஜேஸ் வரன்.

குருவணக்கம்.

காமபுரிமேவிவ்ளர் கங்காளன்மழுவேந்தி
வாமமதில்மலைமகளை வைத்தசிவபெருமான்றன்
நாமமதைழுப்போதும் நவின்றேத்துமெங்கள்குரு
பூமனெனுஞ்சுந்தரவேள் பொன்னடியைப்போற்றுதுமே.

உ

குகமயம்.

திருத்தணிகை

ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள்

கீர்த்தனம்.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சீராரும் வல்லபையைச் சேர்ந்துமகி ழும்பதியே
பேராரும் மாங்கனியைப் பெற்றவனே—யோராரும்
மாதங்க மாமுகனே மாதுமையா ளன்மகனே
ஆதங்கந்தீர அருள்.

ஆசிரிய விருத்தம்.

அந்திகம்பரன்மகிழும் அம்பிகையெனக்கூறு
மகிலாண்டவல்லிதேவி
யருளியகுமாரகிரு பாகாவிலாசனே
யானைமுகனனபரனே
யிந்திரற்காகவெங் குருவின்முன்காக்கைபோ
லெழிலுற்றவடிவமாகி
யிசைபோதமிக்ககுறு முனிநாதன்வைத்தவொரு
வீணையிலாக்காகநீரை
விந்தையுடன்மண்ணிலே யோடக்கவிழ்த்தவா
விண்ணவர்களஞ்சலிசெயும்
விமலாவினயகா கமலபொற்பாதா
விளங்குவேதாந்தமுடிவே
அந்திவண்ணயிரா ஜேஸ்வரன்சிந்தையினி
லனவரதம்வாழீசனே
அதிபதிவிநோதனே மதியணிசுபோதனே
ஆதிசிவகணநாதனே.

சுந்தரவிநாயகன் துதி சாஹித்யம்.

(ஓ திருநெல்லூர் என்ற மெட்டு.) இராகம்-கவாய்-தாளம்-ரூபகம்

ஆனைமுகமானபெரு மானே—எழில்
ஆகுமிசையேறுங்கண வானே—உயர்
அண்டரெலாங்கண்டுபுகழ் வோனே—அந்த
ஔவைக்கருள் செய்வித்தக
திவ்யக்குண தெய்வத்திரு
அண்ணலெனுங்கண்ணிய சீமானே—நீல
அச்சுதனர்பட்சமரு கோனே ஆனை

வல்லபையாலின்பமுறு மோகா—பல
வரந்தருபாசாங்குச விவேகா—எந்தன்
வல்வினையைத்தீர்த்தருள்வா யோகா—கான
வள்ளிதனை நண்ணிடவே
செல்லும்சிவ சுப்ரமண்யன்
வணங்கிடவேவாரணமாய் வாகா—சென்ற
மாமணியேவாசமுறுந் தேகா ஆனை

காரைநகர்வாழுங்கண நாதா—முனம்
காகவுருவாகிமிகு போதா—முனி
கமண்டலங்கவிழ்த்திடும் விநோதா—உந்தன்
கஞ்சப்பதங் கெஞ்சித்தினம்
நெஞ்சிற்றுதி செஞ்சொற்புகழ்
காதினிலேறுதடேன சூதா—இந்தக்
கடையனிடர்தீர்க்கயினம் வாதா ஆனை

சம்புநகரென்னுமுயர்ப் பூமி—சிறு
தனையனிராஜேஸ்வரனுந் தேமி—பணி
சத்திகணபதிகிருபா நேமி—பொல்லாச்
சண்டனுமிங் கண்டிடாது
கண்டனைசெய் தொண்டர்நேய
சங்கரிகௌமாரி சிவகாமி—பெற்ற
ஐங்கரவிநாயக சுவாமி ஆனை

(கபுநாலே நாலே என்ற வர்ணமெட்டு.)

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சிவசேயா நேயா

அநுபல்லவி.

சிற்பரா சீலா—அருள்புரி
தற்பரா லீலா சிவ

சரணங்கள்.

தேவுலககாவலன்றன் ஆவற்பூஜைநாடியே
காவளரகாகநீரைக் கவிழ்த்தாயன்புகூடியே சிவ

கானகத்தில்புனத்தைக்காக்கும் தேனிகர்மொழிசேரவே
ஞானசண்முகனார்க்குஅருளை நல்கினாய்மோகம்தீரவே சிவ

பாவனிராஜேஸ்வரன் பாவிற்கிரங்குமாதியே
யாவளருஞ்சம்புநகர்வாழ் மாதங்கமுகஜோதியே சிவ

குருவானவா என்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கணநாதனே நாடுங் கமலப்பாதனே
நானிலம்பணி ஞானசுந்தர னனைவங்கர மோனந்தாகண நா

வேதாந்தத்தின்பொருளே வேழமுகத்தெருளே
வேலனெனு மூலனுக்கனுகூலனே மிகுகோலனேகண நாத

அன்னைஉமையீன்ற ஐங்கரனேசீலா
ஐயனேசொலுந் துய்யனேவினை நையவேஅருள் மெய்யனேகண

பாண்டவதூதனுர் பட்சமுள்ள மருகா
பாரியிந்துவைக் கோதிலாதனி யாதியேகுண நீதியேகண நாத

அன்பனிராஜேஸ்வரற் காதாரமானவனே
அத்தனேபரி சுத்தனேஎழில் முத்தனேயுயர் கத்தனேகண நாத

நல்லது மாதகிமானே—என்ற மெட்டு.

சம்புநகர்முருகோனே—உந்தன்
தாளிணை யைப்பணிந்தேனே—உயர்
உம்பரிடத்தோனே—எனக்
குற்றதுணை நீபெம்மானே சம்பு

தந்தைக்குமந்திரமோதி—வைத்த
தற்பரநித்யா னுபூதி—இன்று
எந்தனையாளும்பிரக்யாதி—யுற்ற
எந்தையேசண்முகஜோதி சம்பு

தேவகுஞ்சரிமணளா—குளிர்
செந்தாமரைமலர்த்தாளா—வள்ளி
ஆவலுடனேகுணளா—கட்டி
அணைந்திடுஞ்ஜெயதோளா சம்பு

சங்கரியருளும்பாலா—சிவ
சச்சிதானந்தனேமூலா—என்றும்
மங்கலிலாப்புகழ்சீலா—சிறு
மைந்தன்ராஜேஸ்வரன்மேலா சம்பு

நான்முகன்றேவி நாமகள்துதி சாஹித்தியம்.

(உனக்கு மணஞ் என்ற வர்ணமெட்டு) இ-ம்-தேசிகம்-தாளம் ஆதி.

அம்மாவாணி அடிபணிந்தேன்
ஆதரித்திடுவா யெந்தனைநீ
சும்மாயிருந்திடில் நலமாமோ
சுகமுறும்நான் முகனிடம்வாழ்
துகளறுசீர் பாரதியே அம்மா

புத்தகமேந்திடுங் கல்யாணி
பூரவாகனி கலைவாணி
நித்தியநின்மல மலர்வேணி
நின்னைவிட யின்னிலத்தில்
என்றனுக்கார் கதியருளே அம்மா

கமலாசனியே பிரகாசி
கருணாகரியே விசுவாசி
விமலேஸ்வரியே பவநாசி
மேதினியில் ஓதும்சிறு
ராஜேஸ்வரன் ஏத்துமெழில் அம்மா

வேதமுதல்வன் விருபாக்ஷீசன் துதி சாஹித்யம்.

ஆறுமுகாமயில் வாகா சம்போகா என்ற மெட்டு.

இராகம்-கவாய்-தாளம்-ஆதி.

சாம்பசிவாயெனைக் காவாமாதேவா
சாம்பசிவாயெனைக் காவாமாதேவா சாம

பாம்பையணிந்தோனே பாதிமதியோனே
சாம்பவியைமணந்த சங்கரசதாசிவனே சாம்

சம்புநகர்தனிலே சந்ததமும்வாழ்வோனே
உம்பர்நிதம்பணிய ஓங்கும்விருபாக்ஷிசனே சாம்

வேம்பணியும்பாண்டியனாய் மேதினியில்வந்தோனே
வாம்பரியாய்நரியை மர்மமுடனேசெய்தோனே சாம்

நம்பும்அடியர்க்கருள் நல்கும்பெருமானே
வம்பணிராஜேஸ்வரன் தெம்புமிகுசங்கீதனே சாம்

திருவள்ளூர் வாழுங்கோனே என்ற மெட்டில் பின்மகுடம்.

இ-ம் தேசிகம்-தா-ம்-ஆதி.

சம்புமாநகர் வாசா—சிவ
சாம்பவாபவ நாசா

சண்டனுமென்னை அண்டிடாமுன்னம்
தொண்டனுக்கருள்வாய் அண்டர்கோவே
தண்ணருள்செய்யீசா-யித்
தாரணியோர்புகழ்நேசா சம்

அம்புஜமலர்ப்பாதா
அகிலாண்டதேவிசமேதா
அரியுமயனுமுன் அடிமுடிமாறிப்
பரிவொடுதேடியும் அறியாஇறைவனே
ஐம்முகாகுரு நாதா-என
தையனேகுண நீதா சம்

திங்கள்சூடும் வேதா-சொலுஞ்
சின்மயானந்த போதா
திரிபுரமெரித்தாய் கரியுரிபோர்த்தாய்
நரிபரியாக்கிய பெருமைகொண்டோனே
சேயிராஜேஸ்வரன் கீதா-மா
தேவயார்க்கு மதிதா சம்

அகிலம்போற்றும் அகிலாண்டேஸ்வரி துதி சாஹித்யம்.

பனைகைஸி பகார்கைஸி என்ற வர்ணமெட்டு.

இ-ம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

அன்னையேநம்பினேன் தாயே யுனக்கு
அன்புள்ள சேயே
இன்னமும்வர்மமே னீயே வந்தின்று
என்னையாள் வாயே அன்னை

தோஹையரு.

அகிலாண்டதேவியுன தம்புயப்பாதமே
ஆதார மயிலேறியே
மகிழ்வாய்வந்தன்பர்க்கு வரமருள்பவனையீன்ற
மாதாவெனக் கூறியே

பல்லவித் தொடர்.

வந்தனைசெய்குவேன் சூலி கபாலி
வாமியே மாலி அன்னை

தொகையறா.

கனகமாய்த்திகழ்மயவரை யரையன்மகளெனக்
கங்காளனை மணந்தே
மனமிகமகிழ்ந்த இங்காரிகௌமாரியே
மங்காதபுகழ் வீரியே

பல்லவித் தொடர்.

மைந்தன்ராஜேஸ்வரன் நேசி வுல்லாசி
மரகத தேசி அன்னை

கார்த்தருள்வாய் கருமுக என்ற மெட்டு.

இ-ம்-நாட்டம்-தாளம்-ஆதி.

வந்தருள்வாய் தேவியே
வாமிசிவ-காமிவள்ளி-மாமியே வந்த

பந்தபாசம் அறுத்திட
பாரிலுன்னைக்-கோரினேனே-நாரியே வந்த

நாரணியே சொந்த
நாதனேத்தும்-பாதமீந்து-ஆதரி வந்த

காரணியே சங்கரி
காங்குவித்து-பரவுமிராஜேஸ்-வானுக்கு வந்த

மதுரை மீனும்பிகா துதி சாஹித்யம்.

பங்கயிலாலே சரீரே என்ற வர்ணமெட்டு.

இ-ம்-இந்துஸ்தான்-ப்யாக்-தாளம்-ஆதி.

அன்னையே மீனும்பிகையே அருள் புரிவாய் அன்

பன்னகமணிந்த பரமனை மணந்த
கன்னயமேமிகுந்த காரியானந்த அன்

வேலவன்தாயே வேண்டினேனீயே
பாலன்முன்வருவாயே பாதுகாப்பாயே — அன்

சங்கரீசிவி சர்ப்பநன்மாலி
பங்கயபாதசூலி பாரனுகூலி — அன்

மைந்தன்ராஜேஸ்வரன் சிந்தையில்வாசி
சுந்தரியேவிஸ்வாசி சோபிதநேசி — அன்

இராவணசம்மார இராமபிரான் துதி சாஹித்யம்.

மைதேரே சம்சாயுரே என்ற வர்ணமெட்டு.

இராகம் இந்துஸ்தான் தாளம் ஆதி.

ஜெயராமா பரந்தாமனே சீதரனே — ஜெய

கயல்நயனகௌசலை கண்மணியாய்ப்பிறந்த
மலர்க்-கண்ணுமேகவண்ணனே கருணைசெய்வாய் — ஜெய

விஸ்வாமித்திருடன்-மேவிவனத்தில்சென்றே
வேள்விமுடித்தாய் தாடகையைக்கொன்றே — ஜெய

அகலிகைசாபந்தீர்த்து அன்பாய்மிதுலைச்சேர்ந்து
பெருந்-தகையாய்ஜானகியைத் தான்மணந்து — ஜெய

பாரும்விண்ணும்புகழப் பரசுராமன்கர்வத்தைப்
பாழாக்கிஅயோத்தியில் வந்துநின்றாய் — ஜெய

சிற்றன்னைவாக்கின்படி சீதையிலக்ஷ்மணனைச்
சீராய்க்கூட்டிக்கானகஞ் சேர்ந்தாயன்றே — ஜெய

பாவிசூர்ப்பனகையால் ஆவியானசீதையைப்
பாதகனிராவணன் பற்றியேக — ஜெய

வழியில்வாலியைக்கொன்று மணிமகுடஞ்சுக்ரீவன்
மாகூழியாய்த்தரிக்கவருள் மாயவனே — ஜெய

அனுமான்துணையைக்கொண்டு அந்தஇலங்கைச்சென்று
அறிவில்லாததசமுகனை யதமேசெய்தாய் — ஜெய

சானகியின்சிறையை சந்தோஷமாகமீட்டு
சார்ந்தேஅயோத்திபட்டந் தரித்தவனே — ஜெய

மைந்தனிராஜேஸ்வரன் சிந்தையினில்வாசனே
கந்தவேள்மாதுலனே காருண்யனே — ஜெய

செந்தூருபாதை யிதாமடி யன்னமே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கவாய்-தாளம்-ஆதி.

தாசரதியேவைகுந்த நாதனே-நின்னை
தஞ்சமென்றடைந்தேன் பிரக்யாதனே-பெருந்
தகையுடனிங்கித அகலிகையென்பவள்
சுகமுறசாப விமோசனஞ்செய்தருள்
சங்காழியேந்துங்குண போதனே-இந்தத்
தருணம்வந்தருளும் விநோதனே — தாச

விண்ணோர்க்கெஞ்ஞான்றுமிடர்ப் புரிந்தோன்-சாம
வேதகீதமதனையுந் தெரிந்தோன்-குலம்
வேருடனழிந்திட போர்புரிமாதவ
சீருடன்சீதையின் சிறையதைமீட்டவ
விமலா காரைநகர்வாழ்வோனே-எழில்
வித்தகஉத்தமர் பணிவோனே — தாச

நந்தாமுகுந்தரகு ராமனே-நிதம்
நாடுமடியர்க் கருநேமனே-திவ்ய
நறுமணம்வீசிடுந் துளபத்தாரா
நகுசெந்தாமரைப் பாதசிங்காரா
சிந்தாகுலந்தவிர்ப்பா யீசனே-மிகு
சிறுவனிராஜேஸ்வரன் நேசனே — தாச

அம்பிகா உன்மகன் குகன் என்ற வர்னமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

கண்ணனே கருணையே புரிவாய்
நண்ணினேன் பதமலர்ப் பரிவாய் — கண்

சரணங்கள்.

மண்ணிலேலமையடியேன் மகிழ்ந்துப்போற்றவரியேன்
அண்ணலேமிகச்சிறியேன் ஆசை மோச பாச நாசனே — கண்

மாதர்மோகந்தனிலே மயங்கினேனேவிணிலே
வாதையடைந்தேனதிலே வாரும் பாரும் தீரும் காருமே

கஞ்சன்றனைமடித்தாய் காளிங்கன்மேல்நடித்தாய்
செஞ்சொற்குழல்பிடித்தாய் தீர வீர ஆர வாரனே — கண்

மாதுத்ரௌபதையின் துயில் மானங்காத்திட்டமுகில்
சாதுசிலர்கள்புகல் சங்க வங்க பொங்க துங்கனே கண்

பாண்டவருக்குரிய பாதிநாட்டையறிய [னே
ஆண்டகைத்தூதாய்த்துரிய னவையில் லவமில் லவசெல்பவ

வித்தகர்க்கருளும்நிதி வேணுகோபாலபதி
நித்தம்ராஜேஸ்வரன்றுதி நிமல விமல கமல அமலனே கண்

சத்துரு சங்கார சண்முகன் துதி.

ஆசிரியவிருத்தம்.

அம்புவியிலுள்ளவர்க ளனுதினமும்போற்றிசெயு
மயிலேங்கிடுங்கையனே
அந்தகன்வந்தெனுயிர் கொண்டுபோகாமுனம்
அழகானமயிலேறியே
செம்பவளமேனிகுற மாதுதெய்வானையுடன்
சேயன்முன்வந்தருளுவாய்
சென்னிமிசைகங்கையணி பரமசிவனிருதிருச்
செவியிலுபதேசித்தவா
நம்பனேமாங்கனிக் காயிச்செகத்தையொரு
நாழிகையிற்சுற்றினோனே
நளினமலர்மேவுபிரமாவை வெஞ்சிறையிலே
நண்ணவைத்திட்டகோவே
அம்மைசிவகாமியருள் சுந்தரகுமாரனே
அருளார்ந்த தணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

சரவணபவானந்தன் தாள் துதி சாஹித்யம்.

பாலராமனையே என்றமெட்டில் பின்மகுடம்.

இ-ம்-தோடி-தா-ம்-ரூபகம்.

பல்லவி.

ஆறுமுகத்தெய்வமே—உனை
அஞ்சலித்தேனெந்தன் சஞ்சலந்தீர்த்திடும் ஆறு

பன்னிரு—அத்தன் முத்தன் சுத்தன்
கத்தன் சுத்தன் அத்தன் ஆறு

முன்னம்—ஆலமுண்ட நீலகண்டன்
பாலனண்டர் மேலன்கண்ட ஆறு

சரணங்கள்.

மாறுகொண்டசூரர் யாவரையும்வென்றே
மாதுதெய்வயானை மானைமணந்தன்றே
கூறுகின்றதனிகை யமருங்குன்றே
கொஞ்சமேனுமுந்தனிட
நெஞ்சமிரங்காததென்ன ஆறு

ஏழைபடுந்தொல்லை நவிலலாகுமோ
ஏனுன்றனக்கிந்த ஜாலமாமோ
மாழைபடுமுன்பெரு மைக்கீதாகுமோ
மந்திரத்தைச்சுந்தரனுந்
தந்தைக்குமொழிந்தவனே ஆறு

வேடநங்கையான வள்ளிதன்பால்சென்று
விதவிதமாய்மோக வார்த்தைகள்புகன்று
தேடித்தந்தத்தினை மாவினையுந்தின்று
சேர்ந்துத்தழுவிமனங்களி
கூர்ந்துத்தரிசனமருளிய ஆறு

பாலனிராஜேஸ்வரன் பாடுங்கீதனே
பக்தரானவரு மேத்தவதீதனே
கோலாகலமயி லேறும்விநோதனே
கோதிலாதசிதபாத
ஆதிநாதவேதபோத ஆறு

வாவர்குகமுருகா என்றவர்ண மேட்டு.

இ-ம்-மோகனம்-தா-ம்-ரூபகம்.

பல்லவி.

ஆறுமுகா முருகா—அன்று
அறுவர்கள்மன மகிழ்ந்திடமுலை
அருந்திடுஞ்சா வணபவகுக ஆறு

ஏறுமயின்மேலிப்போது தொண்டனென்றன்
இடரொழிந்திட அருள்புரிந்திட
நொடியினில்வருகுவாய்குருபர ஆறு

சரணங்கள்.

பன்னிரண்டுலகையனே தேவர்ப்
பகைவர்களுயிர்க் கவர்ந்திடப்பெருந்
தகையுடனயிலினை விடுத்தருள்
மன்னுசம்புநகர் தன்னில்வாழுந்தேவே
மதியொடுபெரு நதியணிமுதற்
பதிமுதல்வரு நிதியெனவுரை ஆறு

தெய்வயானைநாதனே—வள்ளி
தென்புடனணைந்திடவெண்ணியே
அன்புடன்சேவை யைத்தந்தவா
தெய்வமேநீயல்லால் திக்கில்லைவேலனே
சிற்பரனே ராஜேஸ்வரன்
சொற்பரனே தேஜோன்மய ஆறு

தாவடந்தந்தேன்னைநீவிடடி என்ற வர்னமேட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

ஆறுமாமுகங்கொண்டவா முருகா—பால்தயிருருந்திட
ஆயர்மாமனைசென்றவன் மருகா
கூறுமடியவர்தங் குறையைத்தவிர்த்தாள்வோனே
குமாரதணிகாசல குகனேயெம்பெருமானே ஆறு

காவலாய்ப்பரண்மிசை நின்று—கற்களைவீசி
கானக்குயில்புறு வேணதைவென்று
ஆவலாய்த்தினைமாவை அள்ளிப்புசித்திருந்து
ஆலோலம்பாடியவள் லீலாசுபோதவானே ஆறு

சேவலங்கொடியேந்திடுங்கையா—அன்பாகவேதினம்
சேவித்தேனுன்பாதமே மெய்யா
பூவைமீனாட்சியம்மை புத்திரனேவிசாகா
புரமெரிபடச்சிரிஅரன் குருவேவைபோகா ஆறு

தாசன்ராஜேஸ்வரன் சங்கீதனே—வேலாயுதத்தைச்
சல்தியில்விடுஞானவேதனே
மாசகன்றமணியே தேசுலாவுந்தணியே
பாசபந்தமேதீர பரிவாய்வாருங்கனியே ஆறு

இராவணசம்மார இராமபிரான் துதி சாஹித்யம்.

இராகம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆறுமுகவேலாசுசீலாமூலா
அராவணிபராபரன்றன்பாலாமேலா ஆறு

அநுபல்லவி.

மாறுகொண்டசூரன் வேருடனேமாள
வீறுடனேவதைத்தாய் விண்ணுலகோர்மகிழும் ஆறு

சரணங்கள்.

தாயுமில்லைதந்தையில்லைதமருமில்லை இந்தத்
தாரணியில்வேறுகதியாருமில்லை
மாயமானவுலக வாழ்க்கையிலேயினமும்
மாழ்கிடாமலேயருள மாமயிலேறிவருவாய் ஆறு

கானக்குறவள்ளியிடங்காதலாகி எவரும்
கருதும்பெரியோராய்க்கடிதிலேகி
மானேமயிலேயென்று வார்த்தைகளையாடி
மந்தஹாசமுடனே சந்தோஷமாய்மணந்தாய் ஆறு

ஆனைமுகவற்கிளையநாதாகீதா உயர்
ஆரணங்கள்நாடரியபாதாபோதா
சேனாபதிநீயே தேவதேவன்நீயே
சேயனிராஜேஸ்வரன் செந்தமிழ்மாலையணி ஆறு

பெண்ணேநவமணியே என்ற மெட்டு.

இ-ம்-ஆனந்தபைரவி-தா-ம்-ஆதி

இன்னம்வர்மமேனையா எழையான்முருகையா
வன்னமயின்மிசை வாகுடனேறியே
வந்தெனக்கருளுஞ் சுந்தரவேலனே இன்

விருத்தம்.

மண்ணில்நற்சைவமோங்க வந்தவதரித்துச்தீய
எண்ணிலாப்புத்தர்தம்மை எதிர்த்துமேவாதில்வென்ற

புண்ணியக்கடவுளே நின் புகழ்சொலவென்னலாமோ
வெண்ணிலாச்சூடும்நாதன் விழைவொடுவுரைப்பாயென்ன

பாட்டுத்தொடர்

மந்த்ரமுரைத்தவனே மாரவேள்மைத்துனனே
பந்தபாசமதைப் பற்றாநீக்கி
பண்ணவசண்முக வண்ணலேவித்தக — இன்

விருத்தம்,

பஞ்சவர்க்காகநாட்டிற் பாதியைக்கேட்கப்போன
வஞ்சககுயோதனன்பால் மாமறைதேடிக்காண
கஞ்சபொற்பாதம்நோகக் கவினுடன்றூதுசென்ற
அஞ்சனமேனிமாயன் அழகுசேருமருமானே

பாட்டுத்தொடர்.

அப்பனேராஜேஸ்வரன் செப்பிடுமுனிவனே
ஐங்கரசோதர துங்கதயாபர
அத்தனே கத்தனே சுத்தனே நித்தனே — இன்

துலங்குசெம்பொன்ன ன்ற மெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

இலங்கைராவண னுயிர்கெடசமர்புரி
மாயவனர்மருகா
என்னையாண்டிடுந்தெய்வமே மீனாக்ஷிபாலா
என்னையாண்டிடுந்தெய்வமே — இல

வனவாழ்ந்திடுங்குற வள்ளியின்மீதினில்
மோகமாகியேவேங்கை
மரமாகநின்றசண்முகா மூவாறுகண்ணா
மரமாகநின்றசண்முகா — இல

குறுமுனிக்கருந்தமிழ் விருப்புடனுரைத்தருள்
கோமானேபன்னிருகை
கோலாகலக்குமரனே யீசாசர்வேசா
கோலாகலக்குமரனே — இல

வானவர்வாழ்ந்திட தானவர்வீழ்ந்திட
வாகாவேலாயுதத்தை
மாகடலில்விடுத்தவா மாரன்மைத்துன
மாகடலில்விடுத்தவா இல

சரணங்கள்.

தினமடியார்புகழ்ந்தேத்திடுமீசா
திருத்தணிகாசலமீதுறைவாசா
கனமுடன்ராஜேஸ்வரன்துதிநேசா
கடியவிழ்கடம்பணிந்திடும்பிரகாசா
கந்தநாதா பவநாசா
காருண்யதேசா இல

இன்னமும்என்மேல்வர்மமேனையா என்ற மெட்டு.

இ-ம்-தேசிகம்-தாளம்-ஆதி.

பல்லவி.

உன்னையேநம்பி வேண்டினேனையா
உற்றதுணைநீயே வேல்முருகையா உன்

அநுபல்லவி.

இன்னமும்வாது ஏன்குமரையா

சரணங்கள்.

படமுடியாதிவ்ர பஞ்சத்தின்மேலே
பாழும்வஞ்சகமாம் நோயதினாலே
கொடியனேங்கித் தவித்தேனிக்காலே
கொஞ்சமேனும்பார்கடைக் கண்ணருளாலே உன்

போதகஞ்செய்மனக் குரங்கின்சேயே
பிணித்தடக்கிடச்சாத கம்புரிவாயே
காதகனுமென் கருத்தினில்நீயே
கனமுடன்பிரியா திருந்திடுவாயே உன்

பிரவணப்பொருள்சொலாப் பிரமனைமோதி
பீடுபெறச்சிறை வைத்திடுஞ்சோதி
அரனிடசெவிதனி லருமறையோதி
அமர்ந்தனை தணிகையி லரியசன்னிதி உன்

சம்புமாககரெனும் ரஞ்சிதப்பூமி
தனையனிராஜேஸ் வரன்றுதிநேமி
உம்பரிடரொழித் தவாசிவகாமி
உத்தமியருள்மகனே கந்தசாமி உன்

ஆசிரியவிருத்தம்.

சரவணபவானந்த கர்ங்கேயசண்முகா
சச்சிதானந்தமேலா
சந்ததமுமடியவர்கள் சிந்தைதனிலேதுதிசெய்
சாமியாங்கார்த்திகேயா
சுரர்களது துயர்தவிர வந்தவதரித்தவா
துய்யபரிபூரணேசா
துங்கமழுமானேந்து சங்கரன்சேயனே
சுப்ரமண்ணியசீலனே
காவின்வசய்ப்பட்டவொரு கஜமூலமேயெனக்
கதரியேகின்றகாலே
கருணையுடனேவந்து கதிதந்தகோவிந்த
கண்ணகமகிழ்மருகனே
அரவிந்தமாமலர்ப்பாதனேகாதனே
அருளார்ந்ததணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதகுலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

அமாரநபி என்ற மெட்டில் பின்மகுடம்.

இ-ம்-தேசிகம்-தா-ம்-ஆதி.

கந்தாசண்முகானந்தம் கதிநின்பாதாரவிந்தம் கந்
கதிநின்பாபாரவிந்தம் கழித்திடுவாயென்பந்தம் கந்
செந்தில்வாழ்வேலா தெய்வானைலோலா
தெருளும்பிரணவப் பொருளினையரனிட
மிருசெவிதனிலுரை குருகுமாரனே கந்

தேவசேனுபதியே செய்யகுணநிதியே
தோலனுகிய சூரனை மாளவே
கூரியவேல்விடு மாரியனேசிவ கந்

வள்ளியின்காந்தா வரமருள்வேந்தா
வஞ்சியானவுமை கொஞ்சும்பாலவொளிர்
மஞ்சைமீதுலவும் ரஞ்சிதாஉயர் கந்

பூவையராசையால் போக்கினேன்காலமண்மேல்
பொல்லாவன்கருங் கல்லாவுன்மனம்
நல்லாருன்றனை யல்லாலாருளர் க

செந்தனேமுருகா செங்கண்மால்மருகா
மைந்தன்ராஜேஸ்வரன் சந்ததஞ்சொல்லும்
சந்தகீதமதைச் சொந்தமாகக்கொள்ளும் கந்

பஜயுரதில்பேனு என்ற மெட்டு.

இ-ம்-தேசிகம்-தாளம்-ஆதி.

கதிரேசனே வா முருகோனே நல்ல
கானமயிலேறி கனவானே கதி

மதியணிபரமனருள்மைந்தாயேனேவாது
மானிலத்திலேமைபடும் வல்வினை புகலொணாது
கதியுனையன்றியெங்கும் காணேனருளிப்போது
காரணபூரணனே காங்கேயாதவமுது
கவிஞனிராஜேஸ்வரன் ஓதுங் கதி

முருகன் திருமால் மருகன் என்ற மெட்டு.

இ-ம்-அடாண-தா-ம்-ரூபகம்.

கருணைசெய்வாய் கந்தவேளே முருகா-அந்த
கானக்குறவள்ளி கோனேமால்மருகா கரு

திருவேதுங்கச் சேவற்கொடிகாங்
திகழற்புத குகாநற்றவ புகழூற்றவ பகையற்றவ கரு

சரணங்கள்.

பிரணவமறியாவேதனை மோதியபீடுற்றயோகா
அதைப்-பித்தர்க்குரைத்துக் களித்தோனேதெய்வ
அத்திசேரும்பாகா
கரங்குவிக்கும்ராசஜேஸ்வரனைக் காரும்வாகா
கருதார்க்கரிதாம் வரதநின்பெருமைச் சொலவெளிதாகுமோ

சித்தாதிதேவர்கள்நித்தம் என்ற மெட்டு.

கற்ருேர்களெல்லார்க்கு முற்றதுயர்போக்கும்
நற்றவமிகுதுய்யனே-விண்ணுடர்குறை
அற்றிடச்செய்யும் ஐயனே

நற்ருயுமையவள் பெற்றவறுமுக
முற்றமுருகையனே-சூரர்களைமுன்
செற்றகுமரையனே கற்

மாதர்களாசையால் பூதலமீதினில்
வேதனையேயடைந்தேன்-மூடர்களுடன்
வேடிக்கையாய்த்திரிந்தேன்

நாதநின்னாலயம் கோதில்லாமல்வந்து
நாடிச்சுற்றமறந்தேன்-பொல்லாதவினை
மூடியருட்டுறந்தேன் கற்

வன்னமயிலேறும் பன்னிருகையாவுன்
பொன்னடியேபணிந்தேன்-பயமில்லையென்
றென்னுளமேதுணிந்தேன்

தென்பூமிவாழ்வம தன்மன்வராதநின
முன்னஞ்சிந்தைகனிந்தே-வந்தாளுமெந்தன்
கன்மம்போகுந்தொலைந்தே கற்

கந்தாகுறத்தியின் சொந்தாயிராமகோ
விந்தனிடமருகா-தெய்வமேபார
விந்தபதமுருகா

மைந்தன்ராஜேஸ்வரன் செந்தமிழ்பாக்களாற்
சந்தோஷமாய்ப்பாடினேன்-வேலோனேசதா
நந்தமதேதேடினேன் கற்

ஆசிரியவிருத்தம்.

வேடிக்கையோடுபரண் மீதேறிகவண்வீசி
விளையாடிபுள்ளோட்டியே
மேன்மையுடனேதினைப் புனமதைக்காத்திட்ட
வேடர்குலவள்ளியம்மை
ஆடகங்கர்த்தவடி வைக்கண்டுநாரதர்
ஐயநிற்காகுமென்று
அன்பாகவேசொலக் கேட்டுடனடங்காத
ஆசையைக்கொண்டுகானம்
நாடியேசென்றந்த மங்கையாருள்ளமது
கனியுருகவேயிதமுடன்
நங்கையேதோகையே யன்னமேயென்றுமுன்
நயமாயநேகசொற்கள்
ஆடியேகூடிட்ட புகழ்செப்பலாகுமோ
அருளார்ந்ததணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

திருச்செந்தூர்வளருமுரு என்ற மெட்டு

இ-ம்-தேசிகம்-தாளம்-ஆதி.

திருக்-கந்தாகடம்பணியும் நாதா-எழில்
காங்கேயவதீதா விநோதா
கவிஞர்போற்றும் போதா
கருதுங்குணநீதா கருதுங்குணநீதா கந்

அரி-நந்தாமுகுந்தன் மருகோனே-உனை
நம்பினேனேநானே-சீமானே
நலமிகுந்தவானே
நாவலர்க்கருள்வோனே நாவலர்க்கருள்வோனே கந்

கான-வள்ளிமகிழும்மணவாளா-உயர்
வானோர்பணியுந்தாளா குணாளா
வாகைபெற்றதோளா
வஞ்சமேனாளாய் வஞ்சமேனாளாய் கந்

கவி-ராஜேஸ்வரன்றமிழ்ச் சங்கீதா-சிற்ப
ரனுக்குரைத்தவேதா-சிந்து

ரத்தைச்சேர்சமேதா
ரஞ்சிதமலர்ப்பாதா ரஞ்சிதமலர்ப்பாதா கங்

பாசுபதம்போலமதன் என்ற மெட்டு.

இ-ம்-ஆனந்தபைரவி- தா-ம்-ஆதி.

கண்ணுயிரமுடையோன் வேண்டிடவன்றே-மிகு
கனமுடன்சென்றே
கருத்தவரக்கர் குலத்தைவேரறுத்தனைநன்றே
கருதரியபொற்குன்றே கண்

வள்ளிதெய்வானையுடன் மாமயிலேறி
வருகுவாய்நேரில்
மதுரிதமணங் கமழ்மலரடி வணங்கினேன்கோறி
வரமருள்பாரில் கண்

குருமுனிக்கருந்தமிழினைக்கூறினவேலா
கோமளாங்கியின்பாலா
கோதுரைத்திட வேதன்சிரத்தில் குட்டியமூலா
கோமானேசுசீலா கண்

பூவுலகையளந்திடுஞ்செய பூபதிமருகா
புண்ணியமுருகா
பூரணப்பொருளேவிசித்திர போகநற்றெருளே
போகியர்க்கருளே கண்

மைந்தனிராஜேஸ்வரன் சிந்தையில்வாசா
கந்தனேயீசா
செந்தின்மாநகர்தங்கியசிவ தேசிகநேசா
சிற்பரவாசா கண்

ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

காக்ஷிதர்வேலா—மீ
ஞக்ஷியின்பாலா காக்ஷி

மாக்ஷிமையாய்க்கானகத்தில் மறவரின்தினைப்புனத்தில்
சூக்ஷியுடன்சென்றந்த தோகைவள்ளியைமணந்த காக்ஷி

தேவரிடுக்கண்டவிர்த்த தேவசேனாபதியே
சேவற்கொடியேந்தும்நல்ல தெய்வமேதயாநிதியே காக்ஷி

பாவைகுஞ்சரிநேயா பாருங்கடைக்கண்சகாயா
தாவுமயிலேறுபவா சாமியேசண்முகனே தூயா காக்ஷி

சீதாபதிமருகா சீர்த்தியுடனாறுமுகா
வேதாந்தத்தின்முடிவாய் விளங்குங்கமலப்பாதசுகா காக்ஷி

கஞ்சமலர்வேதியனை வெஞ்சிறையில்வைத்தவனே
தஞ்சமென்றடைந்தேனுனை சஞ்சலந்தவிர்ப்பவனே காக்ஷி

மந்தாகினியணிந்த சந்த்ரசேகரன்குருவாய்
மந்த்ரமுரைத்தவனே கந்தாகுமரையனே காக்ஷி

சந்தமிகுதணிகைவரை தன்னில்வளருமுருகா
சிந்தையிலிராஜேஸ்வரன் தினந்துதித்திடுஞ்சங்கீதா காக்ஷி

ஆசிரியவிருத்தம்.

குமபசம்பவன்காக நீரைக்கவிழ்த்தவா
குஞ்சரமுகன்சோதரா
குக்குடக்கொடியனே காங்கேயனேயென்று
கூறியுன்னாலயத்தை
வம்பனேன்வலமாக வந்துநினைவாயார
வாழ்த்தித்துதிக்கவறியேன்
மடமாதர்மோகமே மிஞ்சியெக்காலமும்
மயங்கிக்கிடந்தலைந்தே
செம்மையுறுபெரியோர்கள் மீதுவவநீதியாய்
செப்பத்தகாதமொழியைச்
செப்பினேனெத்தனைப் பிழையிருந்தாலுமுன்
சேயெனக்கொண்டொழித்து
அம்புயப்பாதமலர் தந்தெனைக்காரும்
அருளார்ந்ததணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

என்னவேணுஞ்சோல்லடி என்றமெட்டு.

இ-ம்-நாட்டை-தா-ம்-ஆதி.

கந்தாவள்ளிக்காந்தனேகதிர் காமத்துறைசேந்தனே
கந்தனுந்தந்தையிடம் மந்திரமுவந்துரைத்த

தமிழ்நாடு அரசு ... சென்னை-600 008
181939

சிந்துரமுகற்கிளைய மந்தஹாசனேகுமர
கந்தகோன்கேசன்மருகா நந்தியருளுமைந்தனே கந்

பாலவடிவேலவனே கோலமயில்வாகனனே
தாலமதில்சிலமுறு மேலந்துதிமூலவனே கந்

அன்னையுமையீன்றெடுத்த முன்னவாயென்கன்மமதை
நின்னருளினாலொழித்து நன்னளினபதத்திற்சேர் கந்

சேவறகொடியேந்தும்நல்ல தேவசேனைபதியந்தப்
பாவையறுபேர்களிட ஆவல்முலைப்பாலையுண்ட கந்

மந்தனுமிராஜேஸ்வரன் சந்ததஞ்சூடும்பாமாலை
சிந்தைமகிழ்வாகக்கொள்ளும் முந்தனேபன்னிருகரக் கந்

லாவணி ஓரடி மேட்.

இ-ம்-தேசிகம்-தா-ம்-ஆதி.

குருபரானந்தன்முருகேசன்-வனக்
குறத்திமகிழுங்கதிரேசன்-முனங்
குடிலைப்பொருளைப்பரமேசன்-வினவக்
கூறியவறுமுகவாறிருபுயமுடைக்
கொந்தார்கடம்பமலர்வாகன்-மதக்
குஞ்சரற்கிளையவிவேகன்-தெய்வக்
கோதைகுஞ்சரிமகிழ்போகன்-அன்று
கொடியவரக்கர்குலம் நொடியில்மடியசுடர்
கூரியவேலினைவிடுத்தோன்-அறுவர்
கொடுத்தமுலைபாலினைமடுத்தோன்-மலைக்
குறுமுனிக்கருந்தமிழ் அறிந்திடஉரையிடு
கோலாகலாபமயில்வாசன்-கச்சி
குமரகோட்டம்வளரீசன்-துவர்
கோழிக்கொடியணிசர்வேசன்-திகழ்
குயில்மொழியுமையவள் மயலுடனணைந்திடும்
கோமானருளுங்குமரேசன்-கருங்
கோண்டல்வண்ணன்மருகேசன்-நிதங்
கோரும்ராஜேஸ்வரன்நேசன்-என்று
குழகனைப்பணிபவர்பழவினையகலுவர் (குரு)

எப்படிமனந்துணிந்ததோசாமி என்ற மெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

குமரனேவுன்ருளெநம்பினேன் கொடியேனெக்காலும்
கோதைமார்கள்சூதால்வெம்பினேன் கொடும்பழிவிடும்படி (கு)

அநுபல்லவி.

அமரர்பணிதேவேந்திர பதிக்கும்
ஆமோசனகமலவிதிக்கும்
அமலவச்சுதானந்த நிதிக்கும்
ஆதியே ஜோதியே நீதியே க்யாதியே (கு)

சரணங்கள்.

சரவணபவகந்தவேளே
தாராயருளிணையிங்காளே
அரனருளியவரபுத்தேளே
ஆரணமறியாப்பெருமாளே
திரமொடுவள்ளிகுஞ்சரிதோளே
சேருபவாராஜேஸ்வரன்
கோருபவாமயிலேறிடுங் (கும)

முருகேசா முருகேசா என்ற மெட்டு.

இ-ம்-பியாக்-தா-ம்-ஆதி.

பல்லவி.

குமரேசா குமரேசா குடிலைப்பொருளருளுங் (கு)

அநுபல்லவி.

கோதைமாரிருவர் குலவும்புயானந்த (கு)

சரணங்கள்.

கற்றபெரியோர்களைநாடி
கழலிணைப்பணிந்திலனேமுனந்தேடி
சுற்றத்தார்களுடனேயுறவாடி
தொல்லைவல்லையடைந்தேன்சுகமில்லை (கு)

கந்தசாமியேயின்னம்வாது
கடையன்றன்மீதினிலேசெய்வதேது
எந்தாய்நினைவிடயார்துணையோது
இன்றுநன்றுமயிலேறிவாருங்குன்றே (கு)

அந்தரத்தோர்பணியும்வேலா
அழகியதணிகையிலமர்ந்திடுஞ்சீலா
சிந்தாகுலந்தவிர்த்தருள்புரிமூலா
சிறியனிராஜேஸ்வரன்வினையறுத்திடுங் (கு)

ஆசிரியவிருத்தம்.

அமராபதிக்கிறைவனைனயிந்திரனீன்ற
அன்னைகுஞ்சரிமணாளா
ஆதாரம்நீயன்றிவேறில்லைபூதலத்
தையனேகண்ணுக்குவாய்
சமராபுரிக்கிறைவனேதொண்டர்கொண்டாடுஞ்
சங்குசக்ராயுதத்தோன்
தண்டுளபமார்பன்மகிழ்மருகனேசண்முகா
சம்புமாநகர்மெய்யனே
குமராகடப்பமலர்வாகனேயோகனே
குருநாதனேபோதனே
குருமுனிவனுக்கருநதமிழையளித்தவா
குளிர்வனசபததூயனே
அமரர்தனக்கொன்றவிமலாவிடங்கனருள்
அருளார்ந்ததணிகைவாழ்வே
அசுரகுலநாசனேயுசிதநலனேசனே
ஆறுமுகமுருகேசனே.

கலிலோ என்ற மெட்டு.

இ-ம்-பூர்வகல்யாணி-தா-ம்-ஆதி.

பல்லவி.

குமாரகிரியரையனருளுமலர்க்
குழலிசுதாகுகனே தேசிகனே (கும)

அநுபல்லவி.

சமராபுரிவரைதனிலமர்ந்திடும்
சரவணபவசிவனே குருபரனே (கும)

சரணங்கள்.

வனம்வாழ்ந்திடுங்குறமகளணைந்திட
மனமகிழறுமுகனே—இதுதருணம்
கனமாம்வேலாயுதமேந்தியே
கருணைபுரிவித்தகனே—பதயுகனே
தினமோராஜேஸ்வரன்மறவாத்
திருவடிதருமுருகா—மால்மருகா (கும)

சரசக்காரமாமா என்ற மெட்டு.

இ-ம்-சுருட்டி-தா-ம்-ஆதி.

கண்ணிகள்.

ஸ்ரீ-சரவணப்பெருமானே
சரணகதியடைந்தேனே ஸ்ரீ (சர)

குண-சாந்தனே மலைவேந்தனேவள்ளிக்
காந்தனேதிகழ் சேந்தனே சிவ (சர)

தோஹறு விருத்தம் மாதிரி எடுப்பு.

அன்னத்தான் சிரமீதில் அயர்ந்திடக் குட்டிசிறை
அன்றுவைத்தாய்
பொன்னத்தான் மருகனே போதமுறு முனிநாதன்
புகழுமெந்தான்
பன்னத்தான் முடியாத பரந்தமின் பெருமையைப்
பாவியேன்யான்
என்னத்தான் சொல்லுவேன் ஏதமில் லாதகுக
ஏகபோகா.

கண்ணித்தொடர்.

வனக்குறத்தியின்மோகா
வரமேதந்தருள்விவேகா—உயர்
வானவர்பணி ஞானசற்குரு
வானசண்முக மோனதற்பர (ஸ்ரீசர)

ஷை தோஹறு விருத்தம்.

கயல்கயனமடவார்கள் காமமெனுந்தீயிலே
காதலாகி
மயல்கொண்டுயென்னாளும் வாடினேனல்லாமல்
மனமகிழ்ந்தே

மயிலேறிநடமாடும் வடிவேலனேநின்றன்
மலர்ப்பதத்தைக்
கயமைமிக்குடையேனிக் காசினியிலொருபோதுங்
கருதிலேனே

கண்ணித்தொடர்.

ரஞ்சிதமுருகேசா
ராஜேஸ்வரன்மனவாசா-அ
ராவணிந்திடும் தேவனுக்கருள்
கேவலங்கொடி காவலாதிரு (சரவண)

நன்னபியாரே என்ற மெட்டு.

இ-ம்-இந்துபைரவி-தா-ம்-சாபு.

பல்லவி.

சண்முகாயின்னும் நீவர்மம்
பண்ணுவதோ நல்லதர்மம் (சண்)

சரணங்கள்.

பெண்டுபிள்ளை யாசைக்கொண்டு
பேதையுழன் றேனேபண்டு
அண்டர்கோவே கற்கண்டு
அனையமொழிகொள் மனைவிகுஞ்சரிசேர் (சண்)

வேடிக்கையாய் கானகத்தில்
வேடுவரின் தினைப்புனத்தில்
நாடிச்சென்றத் தினத்தில்
நம்புதல்வியை தெம்பொடுமணந்தவா (சண்)

திருத்தணிகாசலனே
செப்புங்கோலாகலனே
கருத்திலுறைமூலனே
கருணைபுரி யித்தருணங்குருபரா (சண்)

சிகிமேலேறுங்குகா
சேவைதருவாய் வித்தகா
மகிதலம்புகழ்முருகா
வரனேராஜேஸ் வரனுக்கருளுவாய் (சண்)

ஆசிரிய விருத்தம்.

சக்கழியேந்துநெடுமா லயோத்திக்கிறைவன்
சாந்ததசரதபாலனுய்த்
தரணியிற்றுேன்றியே ராட்சதக்கூட்டங்கள்
சமனூர்புகச்செய்தவன்
மங்காதபுகழ்வீரன் கோதண்டராமனெழில்
மணிவண்ணன் நன்மருகனே
மயில்வாகனக்கடவுளே வள்ளிலோலனே
மலைராஜனீன்றமங்கை
மங்காளனிருசெவியில் மந்த்ரமுபதேசித்த
பன்னிருகரத்தண்ணலே
பகவனைக்சிறையினிற் பாங்காகவைத்துவிப்
பாரைச்சிருட்டித்தவா
அங்காடிமாடமாளிகை திகழுந்தணிகையினி
லனவரதம் வாழீசனே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

பனைகைஸி என்ற வர்ணமெட்டு.

இ-ம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

சண்முகாசெங்கதிர்வேலா—சாம்பவன்
சற்குருமூலா
விண்முகவாசிகள் மேலா—விசாகா
வேண்டினேன்சிலா (சண்)

தோஹையரு.

சண்டாளநிருதார்குலம் நாசமாக்கவே
சமர்தொடுத்திட்டதீரா
பெண்டாசையேகொண்டு மண்டலத்துழலுமிப்
பேயனையாளும்வீரா

பல்லவித் தொடர்.

பிரமனை'மிகக்கொடுஞ் சிறையேவைத்தவா
பிறணவத்திறையே

தோஹையரு.

மாமயிலின்மீதேறி வந்துனதுமைந்தனது
வல்வினை யொழிக்குமுருகா
சாமியேவரைராஜ னீன்றபார்வதிசுதா
சங்கேந்து மாயன்மருகா

பல்லவித் தொடர்.

சரவணபவனேகுமரேசா இராஜேஸ்
வரனுக்கருளீசா

ஹாஜி ஹாஜி என்ற வர்ணமெட்டு.

இ-ம்-தேசிகதோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

சாமிகுமரவேலனே சரவணபவசிவசீலனே (சாமி)

அநுபல்லவி.

சாக்ஷிகாமாக்ஷி மீனாக்ஷியருளும்பாலனே
சரவணபவசிவ சீலனே (சாமி)

சரணங்கள்.

கானவள்ளிநேயனேயுந்தன் காக்ஷிதாவுபாயனே
காவாமுன்வாவா கழடிபணிந்தேன் தாயனே
கருணாகரனே சகாயனே (சாமி)

காமதுரைமைத்துனயெழில் கனகமாமயில்நிர்த்தனை
கதியோகவநிதியே ராஜேஸ்வரன்துதிகர்த்தனே
கந்தவேளே சண்முகமுத்தனே (சாமி)

தாரதிலாரு தில என்ற மெட்டு.

இ-ம்-இந்துபைரவி-தாளம்-ஆதி.

திருத்-தலமெனுஞ் செந்தூரவேலவனே
சரவணபவசிவ சீலவனே
பலத்தவரக்கரிடக் குலத்தைவேரறுத்திட
நலத்துடனேவேல் விடுத்தவனே

தோஹையரு.

பொதிகாசலக்குறுமுனிக்கருந்தமிழினைப்
போதித்தவாமெய்யனே
மதிபூண்டசெஞ்சடைப்பெருமானினுதலிலே
வந்தவாறுருகையனே

ஆறுமுகாகுக குருபரனே
அயிலேந்திடும்பன்னிருகரனே
அழகாய்மயில்மிசை யமர்ந்திடுங்குமரனே
அற்புதனேஎழில் சிற்பரனேஉயர் (தல

ராஜேஸ்வரன்துதிசங்கீதா ரஞ்சிதமால்மருகாவேதா
நறுமணங்கமழ்கடம் பணிந்திடும்விமலனே
நாயரேதெய்வ நாயகனே (தல)

ஆசிரியவிருத்தம்.

மலைராஜனுக்கரிய மகளாயுதித்தசிவை
மகமாயிதிரிசூலியின்
மடிமீதுவிளையாடு குமரேசனேகான
வள்ளியிடமணவாளனே
கலைவாணிநாதனைச் சிறையினிலடைத்துக்
கடற்சூழ்ந்தவையகத்தைக்
கனமாய்ப்படைத்தவா சூராதியவுணரைக்
கருவறுத்திட்டவேலா
விலைமாதர்படுமோச மோகவலைதன்னிலே
வேட்கையேகொண்டுநாளும்
வீணாகவேதிரிந் துழலுமிப்பாவியை
விமலனேயேன்படைத்தாய்
அலையாமலினியாயினும் பதமிழலில்வாழ
அருடருந்தணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

அமுதமுதேக்கோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-அபுரூபம்-தாளம்-ஆதி.

சரவணபவஅருள் தாதாவினோதா
தாதாவினோதா மலர்ப்பாதாஅதீதா (சர)

பரண்மீதிலேநின்ற பாவைவள்ளியிடஞ்சென்றே
பரனேகுறக்கொடியின் பதமேபணிந்தகுன்றே (சர)

தோஹைறுவிருத்தம்.

திரிபுரமெரித்ததேவின் திருநுதல்வழியாய்வந்தாய்
பரிபுரமணிந்தகோவே பகைஞராமவுணராவி
செரிபடவேல்விடுத்து நீடுலகினில்மடித்தாய்
கரிபரியாகச்செய்த நாயகர்குருவானேனே.

தாரானபோதுதாரா என்ற மெட்டு.

இ-ம்-தேசிகதோடி-தா-ம்-ஆதி.

துணையாகவாமுருகா
துய்யாபன்னிருகையாநம்பினேன் (துணை)

இணையடியைப்பணிந்தேன்
என்வினைநீக்கத்துணிந்தேன்
எமன்வந்திடும்வேளைதனிலேவுன்
நேமமாமயின்மீதினிலேறியே (து)

பஞ்சவர்க்காய்த்தூதுசென்றே
பாரதயுத்தத்தில்வென்றே
பார்த்தசாரதி யாகிநின்றவன்றன்
நேர்த்திமருக னைவினோதனே (து)

தோஹையரு.

மாதாபிதாதெய்வம் குருநாதனீயலால்
மண்டலத்தேதுகந்தா
வேதாவைசிறைவைத்த சிவசுப்பிரமண்ணியா
வேடர்குலவள்ளி சொந்தா

பாட்டு ஷ சரணத்தோடர்.

ராஜேஸ்வரன்குருவே
தேஜோன்மயவுருவே

ராக்ஷதர்குலம் வேரொடுபோக்கிய
மாக்ஷிமையுறு வேலதைத்தாங்கிய (துணை)

தேக்துங்கிமோரே என்ற மெட்டு.

இ-ம்-இந்துஸ்தான்தோடி-தாளம்-ஆதி.

நாயகாயிந்த நாயேனையாண்டருள்
நாயகாதெய்வ நாயகாதெய்வ (நாய)

மாயமேமிகுந்த மண்டலம்புனைந்த
மாமலருறைஅயன்வாடிடச்சிறை
வைத்தவாகுணநிதியனே (நாய)

பெண்களினாசையே பெரிதெனப்பேசியே
பேதையேன்வாடிநின்றேன் பிஞ்ஞகாகுகப்
பெருமானேநீயேகதி (நா)

வேடவள்ளிக்காக வேங்கைமரமாக
மேன்மையுடனேநின்ற வேலவாயிந்த
மேதினியோர்புகழ்ந்திடும் (நாய)

நஞ்சினை அயின்ற நம்பனார்பயின்ற
நாரணிபுதல்வனே நாவல்மாநகர்
ராஜேஸ்வரன் துதிசெய் (நாய)

புதுமைச்சித்திரப்பதுமை என்ற மெட்டு.

இ-ம்-செஞ்சுருட்டி-தா-ம்-ஆதி.

திருப்பழனியம்பொருப்பினில்வாசா—அடியார்கள்கூடி
விருப்பமாய்த்தொழுஞ் சிறப்புடையீசா-முன்

திகம்பரனுள மிகமகிழ்ந்திட அகம்பெருமொரு நகம்பிறையருள்
சேவற்கொடிகொள்சேந்தனேமுருகா-தேவாதிதேவா
திருடிவெண்ணெயை யருந்தினோன்மருகா
அருக்குமங்கையர்மயக்கினாலோடி-அலைந்துவாடி
அறுமுககுருபரவுனைப்பாடி-வெகு

ஆதரவாயுன் பாதமேகிரி போதுமறந்திடாதுழலுவேன்
அடர்ந்தமாமல ரணிந்திடுந்தெருளே
பெருமானேகமல
அடிநிழலதில் வசிக்கவேவருளே (திரு)

பலத்தசூரரைக்குலத்துடனழிக்க-இந்திராதிதேவர்
கலத்துடன்வான் தலத்தினில்செழிக்க-எழில்

பன்னிருகர மன்னனே திறம் மன்னியே திகழ் பொன்னிறவேல்
வேகத்துடனச்சர்காத்தினிலே-விடுத்தாய்குறமகள்
மோதத்திற்கொரு பாகத்தின்முதலே (திரு)

மணக்குமிங்கித குணக்குழல்மாது-தெய்வானையோடு
மருவியணையுஞ் சரவணசாது-கலே

வாணியினிறை நாணிடச்சிறை மீதில்வைத்திடுஞ் ஜோதியேசிறு
மைந்தனிராஜேஸ்வரன்சங்கீதமே செவியேற்றுக்கொள்ளும்
கந்தநாதமந்த்ரபோதமே (திரு)

பவானியாலா என்ற மெட்டு.

இ-ம்-தேசிகதோடி-தா-ம்-ஆதி.

பவானிபாலாஎனைப் பாதுகாவாய் (பவா)

அவாவுடனின்னடிமலரை அண்டிநின்றேனே
குலவுபன்னிரண்டுபுயாசலேசா யெனைப்பாதுகாவாய் ()

அல்லும்பகலுமாதர்மோகமாகிவாடினேன்
அல்லல்தீர்க்கமாமயின்மீதேறிவாரா
யெனைப்பாதுகாவா (பவா)

தெய்வயானைவள்ளியோடு சேருந்தோளனே
உய்யும்வகைவேறுன்றுங்காணேன்வேல்முருகா
யெனைப்பாதுகாவாய் (பவா)

மைந்தனிராஜேஸ்வரன் சங்கீதநாதனே
சந்த்ரசேகரன்குருவாய்ச்சாற்றினேனே
யெனைப்பாதுகாவாய் (பவா)

பரமானந்தமெய்ப்பரங்குன்றேய் என்ற மெட்டு.

ஓரடிச்சந்தம்.

இ-ம்-தேசிகதோடி-தா-ம்-ஆதி.

பல்லவி.

மனமேனின்னமிரங்கவில்லே வருவாய்வல்லே (மன)

அநுபல்லவி.

கனமுட்டனடியரைக் காப்பதுவன்றே
கடனுனக்குச் சும்மாயிருப்பதுநன்றே

அனவரதமும்நான் படுந்தொல்லைஒன்றோ
அடியிணை தந்தெனை யாள்வதுஎன்றோ (மன)

சரணங்கள்.

பலமேமிகுசூரன்பால்சென்று-விண்ணுலகினோர்
நலமேகொண்டுபிழைக்கநின்று-ஆங்காரமாமும்
மலமேநீங்கிட உயிர்கொன்று-திருத்தணிகைத்
தலமேவந்தமர்ந்தனைநன்று-எந்தனிட

பந்தந்தவிர்ந்திட வந்தருள்கந்தவிசாகா தெய்வானைமோகா
சுந்தரகந்தமுறைந்திடு மந்தவிவேகா தெய்வவைபோகா
சிந்தாகுலமதனை வந்தேதவிர்த்தருளும்வேலா உமாதேவிதன்
மைந்தாகுறவள்ளிக்கு கந்தாகடம்பணியுஞ்சீலா கார்த்திகைமாதர்

அறுவர்முலைப்பாலருந்தியகுமாரா
ஆறுமுகசரவணபவனேகுமாரா
ஆருலேதுணை பாரின்மேலிலை
கோரினேன்உனைநேரில்வாருக
நாதா சுத்தவினோதா

தாருகாசுரன் சீரழிந்திட
போர்புரிந்திடுந் தீரனேபிரக்
யாதா சண்முகவேதா

தசமுகனுடல்செறி படஒளிர்வாளதை
விசையுடன்விடு ரகுராமன்-அஞ்சாதவீரன்
விஜயனிரதமதில் சாரதியாகிய
புஜபலமிகுந்திடுநேமன்-த்ரௌபதாதேவி

மானங்காத்திடும் ஞானவானெழில்
ஆயர்மாமனை மீதில்சென்றுவளர்ந்தோன்
பால்தயிர்வெண்ணெய்

அன்புடனருந்திடுங் கோவிந்தனிடமருகனே
அண்ணலாலுக்குமுன மந்திரமுரைத்தவனே
தென்புடனிராஜேஸ்வரன் சங்கீதக்ருபாகரனே
சிற்பரனே தற்பரனே தேசிகனே முருகனே (மன)

பாலாபிஷேகப்பழநி என்ற மெட்டு.

இராகம்-தேசிகபியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

மாதாபிதாகுரு மாதெய்வமும்நீயே
மாமயிலேறிவந்தருள்வாயே
ஆதாரம்நீயல்லா திந்தபுவிமிசை
ஆருமில்லையுமை அம்மைசேயே (மா)

தொகையறா.

வேதா சுபோதா சங்கீதா அதீதா
நாதா விநோதா ப்ரக்யாதா விதாதா

முடுகுசந்தம்

விளங்குமூவாறு விழியுடையோனே
களங்கமில்லடியவர் கருதிடுவோனே

பல்லவி எடுப்பு.

கானவள்ளியின் காதல்கோமானே
வானவர்நாயகமான சீமானே (மா)

தொகையறா.

வாதாடுசூரோடுசமராடு குமரேசனே
நீதானெனக்குத்தெய்வங்கதிரேசனே

முடுகு சந்தம்.

நின்மலகுருபர சண்முகவேலா
தன்மமதாகுமே தயைபுரிசீலா

பல்லவி எடுப்பு.

தாசன்ராஜேஸ்வரன் நேசவிஸ்வாசனே
பாசபந்நாச யீசாவிலாசனே (மா)

சேந்தாழம்பூதேன்கமழும் என்ற மெட்டு.

இ-ம்-தேசிகம்-தாளம்-ஆதி.

வந்தாளுந்திருக் கந்தாயிந்திரன் மால்மகிழ்ந்திடும் வேதனே
மந்தாகினியணிந்த சுந்தரனார்மகனே

மாரன்மைத்துனனே காரணனேஎழில்
வாரணக்கேதன பூரணனேஎனை (வங்)

விண்ணுடர்முமல் மண்ணுடர்துதி பண்ணிடுங்கடம்பானே
வண்ணதினைக்காவல் வள்ளிதனைமணந்த
அண்ணல்மயிலேறும் புண்ணியரூபனே
திண்ணமாயுன்றனைக் கண்ணமறவேனே (வங்)

செந்தாமரை மேவுமயனைச் சிறையிலடைத்தவேலனே
பந்தவினைநாசா பாவைகுஞ்சரிநேசா
பாலன்ராஜேஸ்வரன் சீலமாய்ச்சொல்லும்பா
மாலையேற்றுக்கொள்ளும் மூலனேயித்ததி (வங்)

ஆசிரியவிருத்தம்.

காத்திகேயாகுமார சரவணபவானந்த
காங்கேச சண்முகேசா
கடம்பமலரணிவாக குழகாசுப்பிரமணிய
கந்தாசடாக்ஷரகுகா
சீர்த்திசிகிவாகனு சேந்தவடிவேலவா
தெய்வானைவள்ளிமோகா
சிவலோகபரமேசன் நற்குரவஜெகதீச
சேவலாவாகுலேயா
நேர்த்தியறுமீன்காதலா மாங்கனிக்காக
நீடுலகைவலம்வந்தவா
நின்மலாமூவாறு கண்ணுபராபரா
நிருதனைக்கொன்றவீரா
ஆர்த்தியுடனின்னும முப்போதும்செப்பவருள்
அழகுதணிகைக்கிரியில்வாழ்
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

ஆசிரிய விருத்தம்.

சுடலைதனில்நடமாடுவோன் வெள்ளைவிடையேறுஞ்
சுருதிமுதலோனைம்முகன்
அய்யசனகாதிமுனி வோர்க்கருளையீந்தவன்
சுடர்மதியினேடுகொன்றை
படலையணிந்தோன்காம தகனன்புராந்தகன்
பாவைச்சிவசங்கரியிட

பங்கினன்கங்காலன் கண்ணுதலிலேவந்த
பரமகுருவேசிறியவன்
நடலையைப்போக்கியுன் பாதாரநீழலில்
நழுவாதுவாழவருளே
நம்பிமகள்வள்ளிதெய் வானையுடன்மயிலேறும்
நற்றேவசேனைபதி
அடலையில்வந்தெதிர்த் திட்டபேரைக்கொன்ற
அழகுமிகுதணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

ஆசிரிய விருத்தம்.

அரிகேசவன்கமல மலராசனத்தனுயர்
அமராவதிக்கிறையவன்
அணேவோர்களுங்கூடி அபயமென்றோலமிட
யடியிணையைவந்துபோற்ற
பரிவாகவேநீவிரஞ் சேலெனச்சொலிப்
பாவியவுணக்குழாங்கள்
பார்மீதிலேவிழப் போர்செய்துவேலதைப்
பண்பொடுவிடுத்ததேவே
திரிலோகமுஞ்சுற்றி வந்தநாரதமுனிவர்
செப்பியநல்வள்ளிமீது
தீராதமோகமே கொண்டுவிரவாய்வனஞ்
சென்றுவிளையாடுமுருகா
அரியணிசெஞ்சடையனருள் சரவணபவாமிக்க
அருளாரந்ததணிகைவாழ்வே
அசுரகுலநாசனே யுசிதநலநேசனே
ஆறுமுகமுருகேசனே.

வாழி விருத்தம்.

[illegible]தமப்பெருமான்வாழி காசறுமுமையாள்வாழி
[illegible]லெங்கிரதும்வாழி ஆறுமுகக்கடவுள்வாழி
பண்ணவன்சேவல்வாழி [illegible]சைமாமயில்வேல்வாழி
உண்ணசையடியார்வாழி வாழியிவ்வுலகமெல்லாம்.

18/9/39

சுப்பிரமணியர் கீர்த்தனை முற்றிற்று.

சென்னை 600 008